

Immaginetta di San Leonardo venerato a Manfredonia

நவம்பர் 6

## *புனித லெயோனார்து (-599)*

இவர் ஒரு மன்னனது அரண்மனையில் உயர்ந்த பதவியில் இருந்தார். இவரை மனந்திருப்பியவர் புனித ரெமிஜியுஸ் என்னும் ஆயர். பின் இவர் அவருடைய சீடரானார். சிறிது காலம் வேதம் போதித்தார். இவர் அரண்மனைக்குத் திரும்பி வரவேண்டுமென்று அரசர் நச்சரித்துக் கொண்டிருந்தமையால் வெகு தொலைவில் இருந்த ஒரு மடத்திற்குப் போய் அங்கு துறவற உடையைப் பெற்றுக் கொண்டார். பெரியவர்களது அனுமதியுடன் ஊர் ஊராய்ப் போய்ப் பிரசங்கித்து அநேகரை மனந்திருப்பினார். பின் ஒரு சிற்றலாயத்தை அமைத்து அங்கு வாழ்ந்து வந்தார். இலைகளும் கனிகளுமே இவரது உணவு தனிமையில் மறைந்த வாழ்வு நடத்தினாலும் அருகில் இருந்த கோயிலுக்குச் சென்று மறை உரைகள் நிகழ்த்துவார். போர்க்கைதிகள் மீதும், சிறைப்பட்டோர் மீதும் அதிக இரக்கம் காண்பிப்பார். தம்மால் இயன்ற அளவு ஆன்ம உடல் உதவிகளை அவர்களுக்குச் செய்வார். இவரது புனிதத் தன்மையை அறிந்த அரசர் இவரது வேண்டுகோளுக்கு இணங்கி சிறைப்பட்டோரை விடுவித்தார். இவ்வித சலுகை அக்காலத்தில் தூயவரான ஆயர்களுக்கும் இவரைப் போன்றவர்களுக்குமே அளிக்கப்பட்டிருந்தது. கைதிகள் தங்கள் பாவங்களின் தோஷத்தை கண்டு உணரச் செய்வார். அவர்கள் தங்கள் பாவங்களுக்காக துயரப்பட்டு தவம் செய்து வாழ்வை திருத்தியமைக்க உதவி செய்தார்.

**சிந்தனை:**

எத்தனையோ பேர் பாவமென்னும் சிறையில் அகப்பட்டுத் தவிக்கிறார்கள். அவர்களுக்கு நாம் தீர்ப்பிடலாகாது. அவர்கள் மேல் அனுதாபம் கொண்டு அவர்களை மீட்க பிரயாசப்பட வேண்டும்.

**செபம்:**

ஆண்டவரே, நிர்ப்பாக்கிய பாவிகளின் மேல் இரக்கமாயிரும்.